

சென்னை கம்பன் கழகம் சார்பில் கம்பன் விழா – பொன்விழா தொடக்க விழாவை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தொடங்கி வைத்தார். இதில் நீதியரசர் இரா.சுரேஷ்குமார், ஒன்றிய முன்னாள் அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், கழக வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வயநாட்டில் நில அதிர்வு பொதுமக்கள் பீதி!

திருவனந்தபுரம், ஆக.11-

கடந்த வாரம் கேரள மாநிலம் வயநாட்டில் பயங்கர நிலச்சரிவால் ஏற்பட்ட பீதியில் இருந்து இன்னும் அப்பகுதி மக்கள் மீளவில்லை. நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் இருந்து தினமும் உடல்களும், உடல் பாகங்களும் கிடைத்து வருகின்றன. தொடர்ந்து மீட்புப்பணி நடக்கும் நிலையில், நிலச்சரிவு ஏற்பட்ட சூரல்மலை, முண்டக்கை யிலிருந்து 25 கிமீ தொலைவிலுள்ள பல பகுதிகளில் நேற்று லேசான நில அதிர்வும், பூமிக்கடியில் இருந்து முழக்கமும் கேட்டது மக்களிடையே மீண்டும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

### ஜார்கண்ட் மாநில

## முதலமைச்சர் ஹேமந்த் சோரன் பிறந்தநாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஆக. 11–

ஜார்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன் பிறந்த நாளையொட்டி அவருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியினை தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



இதுகுறித்து மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:–

**ஜார்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன் அவர்களுக்கு இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்.**

**பலமான தடைகளை எதிர்கொண்ட போதும், மக்களின் உரிமைகளுக்காக போராடும் தங்களின் மன வுறுதி அசைக்க முடியாதது என்பதை தாங்கள் நிரூபித்துக் காட்டியுள்ளீர்கள். தாங்கள் இதே வலிமையுடனும் அர்ப்பணிப்புடனும் தொடர்ந்து வழி நடத்த விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

### எலக்ட்ரானிக்ஸ் துறையை வளப்படுத்த

## டான்டலம் போன்ற அரிய வகை உலோகங்களை அகழ்ந்தெடுக்க அரசிடம் திட்டங்கள் உள்ளனவா?

### மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 11-



திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர், எஸ். ஜெகத்ரட்சகன் 07 ஆகஸ்ட் 2024 அன்று மக்களவையில், எலக்ட்ரானிக்ஸ் துறையை வளப்படுத்தி, பொருளாதாரத்தை மேம்படுத்தத் தேவையான, டான்டலம் போன்ற அரிய வகை மதிப்புமிக்க உலோகங்களை அகழ்ந்தெடுக்கவும். அதற்கு உரிய ஆய்வுகளை மேற்கொள்ளவும், ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா? என்றும் அதற்கான விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் ஜி.கிஷண் ரெட்டி அவர்களிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு அமைச்சர் அளித்த பதில் வருமாறு:-

உலோகங்கள் மற்றும் தாதுக்கள் சட்டம் 1957ன்படி, ஒன்றிய அரசு 24 வகை தாதுக்களை அரிய வகை மற்றும் மதிப்புமிக்க உலோகங்களாக அறிவித்துள்ளது என்றும், கடந்த நான்கு நிதி ஆண்டுகளில் டான்டலம் போன்ற அரிய வகை உலோகங்களை அகழ்ந்தெடுக்க, இந்திய மண்ணியல் ஆய்வு நிறுவனத்தின் மூலம், 6 மாநிலங்களில் 6 திட்டங்களை, நிறைவேற்றி வருகின்றது என்றும். குஜராத், அருணாச்சல பிரதேசம். ராஜஸ்தான், சட்டீஸ்கர், பீகார் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில், லியோமியம், டான்டலம், டங்ஸ்டன் மற்றும் லித்தியம் ஆகிய அரிய வகை உலோகங்கள் கண்டறியப்பட்டு ஆய்வுக்கும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும்.

ராஜஸ்தானில் மட்டும் 164 இலட்சம் டன்கள் அரிய வகை உலோகங்கள் இருப்பில் உள்ளன என்றும், இந்த நிதியாண்டில் இதற்காக பல வரிச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் ஜி. கிஷண் ரெட்டி அரக்கோணம் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்தார்.

### பட்டினப்பாக்கம் லூப் சாலையில் சர்வதேச தரத்தில்

## ரூ.10 கோடியில் கட்டப்பட்ட நவீன மீன் அங்காடி நாளை திறப்பு!

சென்னை, ஆக.11-

பட்டினப்பாக்கம் லூப் சாலையில் ரூ.10 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள நவீன மீன் அங்காடி நாளை திறக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், 125வது வார்டுக்கு உட்பட்ட பட்டினப்பாக்கம் கடற்கரையை ஒட்டியுள்ள லூப் சாலையின் இருபுறங்களிலும் மீன் கடைகள் செயல்பட்டு வருகின்றன. சென்னை கலங்கரை விளக்கம் முதல் பட்டினப்பாக்கம் வரை உள்ள இந்த லூப் சாலையை ஆக்கிரமித்து மீன்கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த கடைகள் மற்றும் இங்கு வரும் வாடிக்கையாளர்களின் வாகனங்களால், லூப் சாலையில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதாக, சென்னை உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கு விசாரணை நடத்தியது. மேலும், அந்த பகுதியில் ஆக்கிரமிப்பு மீன் கடைகளை மாநகராட்சி அகற்றவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி, மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் போலீசார் இணைந்து, மெரினா காவல் நிலையம் முதல் பட்டினப்பாக்கம் வரையிலான ஆக்கிரமிப்பு கடைகளை அகற்றினர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, மீனவர்கள் வாழ்வாதாரம் பாதிக்காதபடி கடைகளை ஒழுங்குபடுத்த நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து கடைகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. இதனிடையே, முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவின்படி, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு சட்டமன்ற மானிய கோரிக்கை விவாதத்தின் போது, மீனவர்களும், பொதுமக்களும் பயன்பெறும் வகையில், பட்டினப்பாக்கம் கடற்கரை லூப் சாலையில் ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் நவீன மீன் அங்காடி அமைக்கப்பட்டு விரைவில் மீனவர்கள் பயன்பாட்டிற்கு வரும் என அறிவித்தார். முதல்வரின் உத்தரவின்படி, சென்னை மாநகராட்சியின் சார்பில் பட்டினப்பாக்கம் கடற்கரையை ஒட்டியுள்ள லூப் சாலையில் போக்குவரத்து நெரிசலை சமாளிக்கும் வகையிலும், மீனவர்களின் நலன் மற்றும் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும் ரூ.9.97 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன மீன் அங்காடி அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், மீன் அங்காடியில் மீனவர்களுக்கு கடை ஒதுக்கும் பணியும் ஏறத்தாழ கணக்கெடுப்பு மூலம் முடிவடைய உள்ளது. இதுகுறித்து நொச்சிக்குப்பம் மீனவர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கிடையே பேச்சுவார்த்தை நடந்து முடிந்துள்ளது. மேலும், எந்தெந்த மீனவர்களுக்கு கடை ஒதுக்க வேண்டும் என மீனவர்கள் சங்கம் சார்பில் கணக்கெடுக்கப்பட்டு, சென்னை மாநகராட்சியிடம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது இதனை சரிபார்க்கும் பணியில் மாநகராட்சி ஈடுபட்டு வருகிறது. விரைவில் முடிவு செய்யப்பட்டு மீனவர்களுக்கு கடைகள் ஒதுக்கப்பட உள்ளது. இதற்கான பணிகளை சென்னை மாநகராட்சி 98% முடித்து விட்டது. தற்போது இந்த மீன் அங்காடியில் அனைத்து பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. இந்த நவீன மீன் அங்காடி நாளை திறக்கப்பட உள்ளது. மீன் அங்காடி திறக்கப்பட்டால் மீனவர்கள் நிச்சயம் பயன் பெறுவர். மீன் அங்காடி சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### ஒன்றிய அரசு தமிழகத்திற்கு

## எத்தகைய தடைகள் ஏற்படுத்தினாலும் அதை முதல்வர் முறியடிப்பார்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, ஆக.11-



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் தமிழக முதல்வர் அவர்களால் மாணவர்களுக்கான கோவையில் துவங்கி வைக்கப்பட்ட தமிழ்ப் புதல்வன் திட்டம் காரைக்குடி பழனியப்பன் கலையரங்கில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசாஅஜித் தலைமையில் எம்.எல்.ஏக்கள் எஸ். மாங்குடி, திருமதி தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி ரதிதேவி வரவேற்றுப் பேசினார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்டத்திற்கான வங்கி கணக்கினை வழங்கி கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது.

தமிழக முதல்வர் அவர்களால் தினசரி தமிழகத்தில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. அந்த திட்டங்களுக்கு செயல் வடிவம் கொடுத்து நிதி ஒதுக்கி செயல்படுத்தப்பட்டும் வருகின்றது. இத்திட்டம் சிவகங்கை மாவட்டத்தில் மாணவர்கள் பயன் பெறும் வகையில் அமைந்துள்ளது. இந்த அரசு ஒவ்வொரு நாளும் திட்டங்களை தீட்டி அதனை நிறைவேற்றி வருகிறது. இதில் முதல்வர் கூறியது போல் பல திட்டங்கள் முத்தான திட்டங்கள் ஆகும். அத்தகைய திட்டங்களில் ஒன்றான முத்தான திட்டம் தமிழ்ப் புதல்வன் திட்டம் ஆகும். இத்தகைய திட்டங்கள் வாழ்நாள் முழுவதும் நிலைத்திருக்கும். ஏற்கனவே மகளிருக்கான பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

இத்திட்டம் குறித்து இங்கு பேசிய மாணவர்கள் தங்களது உணர்ச்சியை தெரியப்படுத்தினார்கள். பெரும்பாலான மாணவர்கள் மகளிருக்கு பெண்களுக்கு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றது. நமக்கு இத்தகைய திட்டங்கள் இல்லையே என்ற மனக்குறை இருந்தது. அதைப் போக்கிடும் வகையில் ஆண்களுக்கு மாணவர்களுக்கு திட்டங்கள் இல்லை என்ற குறை இதன் மூலம் நீக்கப்பட்டுள்ளது. அதற்காகவே இத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. முதல்வர் அவர்கள் பெண்களை உயர்த்தும் வகையில் திட்டங்கள் கொண்டு வந்த காரணம் சமநிலையில் பெண்கள் உயர வேண்டும் என்பதற்காகத் தான்ஆகும். ஆண் ஆதிக்கம் குறைந்து மகளிர் வளர்ச்சி பெற வேண்டும். அவர்கள் வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதற்காக இத்தகைய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. சமுதாயத்தில் உள்ள இத்தகைய மேடு பள்ளங்களை சமன்படுத்தவே இத் திட்டங்கள் முதல்வரால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் அவர்கள் சமூக விஞ்ஞானியாக யோசித்து திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். தேர்தல் நேரத்தில் முதல்வர் அவர்கள் பல்வேறு வாக்குறுதி தந்தார். மகளிர் உரிமைத் தொகை மற்றும் தமிழ்ப் புதல்வன் மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம் ஆகியவைகள் தேர்தலில் வாக்குறுதிகளாக கூறப்படவில்லை. தலைவர் கலைஞர் போல் தேர்தல் நேரத்தில் சொல்லாததையும் முதல்வர் தளபதி அவர்கள் நிறைவேற்றி வருகிறார். மகளிர் பொருளாதார வளர்ச்சி பெற மகளிருக்கான உரிமைத் தொகை திட்டத்தினை முதல்வர் அவர்கள் அறிவித்து அதை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். எதிர்காலத்தில் ஆண்களுக்கும் முதல்வர். அவர்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் திட்டங் களை அறிவிப்பார் என்று எதிர் பார்ப்போம். நாடு பொருளாதார வளர்ச்சி அடைய கல்வி வளர்ச்சி முக்கியம்ஆகும். இதனால் தான் தலைவர் கலைஞர் அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார் .ஒரே நாடு ,ஒரே தேர்தல் என்று ஒன்றிய அரசு மக்களை குழப்பி வருகிறது. தமிழகத்தில் அனைத்து திட்டங்களையும் முதல்வர் சிறப்பாக நிறைவேற்ற காரணம் இந்தியாவிற்கே தமிழகம் வழி காட்ட வேண்டும் என்று விரும்பி தான் இத்தகைய திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். தமிழக மாணவர்கள் உலக அளவில் இந்திய அளவில் தலைமை பொறுப்பினை ஏற்க வேண்டும் உயர் கல்வியில் முதலிடம் பெற வேண்டும். இது 100 சதமாக உயர வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை தீட்டி வருகிறார். நிதி நெருக்கடி இருப்பது என்பது உண்மைதான். ஆனால் அதை காரணம் காட்டி முதல்வர் அவர் கள் எந்த திட்டங்களையும் நிறைவேற்றாமல் விடவில்லை. சொன்ன வாக்குறுதிகளையும், சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றி வருகிறார். தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லாததையும் நிறைவேற்று வார் சொல்லியதையும் நிறைவேற்றுபவர் என்ற பெயர் உண்டு .தலைவர் கலைஞர் வழியில் முதல்வர் தளபதி அவர்களும் செய்துவருகிறார் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. இந்தியாவிலேயே இரண்டாவது மாநிலமாக தமிழகம் தான் ஒன்றிய அரசுக்கு அதிக அளவில் வரி செலுத்துகிறது.ஆனால் ஒன்றிய அரசு ஒரு ரூபாய்க்கு 29 பைசா தான் தருகிறார்கள்.நம்மைவிட வரிகுறைவாக செலுத்தும் மாநிலங்களுக்கு அதிக அளவில் நிதி தருகிறார்கள். தமிழகத்தை ஓரவஞ்சனையாக பார்க்கிறார்கள். இது வேடிக்கையாக உள்ளது. தமிழகத்தின் வளர்ச்சியை இதன் மூலம் அவர்கள் தடுக்க பார்க்கிறார்கள். ஆனால் அதை தலைவர் தளபதி முதல்வர் அவர்கள் வியூகம் அமைத்து அந்த முயற்சியை முறியடிப்பார் .இதனால் ஒன்றிய அரசு தமிழகத்தின் வளர்ச்சியை எந்த நிலையிலும் தடுக்க முடியாது. தமிழக முதல்வர் இந்தியாவில் நம்பர் ஒன் என்று அழைக்கப்பட்டு வருகிறார். அவர் அதை விரும்பவில்லை. தமிழகம் இந்தியாவில் முதலிடம் பெற வேண்டும் என்பதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்து வருகிறார். இதற்காக பல்வேறு திட்டங்களை தீட்டி அதை செயல்படுத்து வருகிறார். எனவே மாணவர்கள் அவருக்கு நன்றியுடன் இருக்க வேண்டும். அவருக்கு ஆதரவு தர வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேசினார்.



இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி கூட்டரங்கில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் மாணவர்களுக்கு வங்கி பற்று அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் தலைமை வகித்தனர். பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், முன்னிலை வகித்தார். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் மாணவர்களுக்கு வங்கி பற்று அட்டை வழங்கி துவக்கி வைத்து பேசினார்.

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில்

## சிங்கம்புணரியில் தென்னிந்திய அளவில் மாபெரும் மகளிர் மின்னொளி கபாடி போட்டி!

### மு.தென்னவன் - இராம அருணகிரி - அ.கணேசன் - த.சேங்கைமாறன் - கழகத்தினர் பங்கேற்பு!

சிவகங்கை, ஆக. 11-

சிங்கம்புணரி ஒன்றிய நகர தி.மு.க. மற்றும் சார்பு அணிகளின் சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழகத் தலைவர் - தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சிங்கம்புணரியில் தென்னிந்திய அளவிலான மாபெரும் மகளிர் மின்னொளி கபாடி போட்டி ஆகஸ்ட் 16,17,18.2024 ந் தேதிகளில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலைமை ஏற்கிறார்.

இவ்விழாவில் மாநில இலக்கிய அணித்தலைவர் மு.தென்னவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இராம.அருணகிரி, மாவட்ட அவைத்தலைவர் அ.கணேசன், மாவட்ட துணைச் செயலாளர் சேங்கை மாறன், வடக்கு ஒன்றிய செயலாளர் பூமிநாதன், பேரூராட்சி சேர்மன் ந.அம்பலமுத்து, தெற்கு ஒன்றிய செயலாளர் கே.பாலசுப்பிரமணியன், பேரூர் கழக செயலாளர் தி.கதிர்வேல், பொதுக்குழு உறுப்பினர் மு.சோமசுந்தரம், பிஆர்.பெருமாள், ஒன்றிய துணைச்செயலாளர்கள் சிவபுரி சேகர், எஸ். முத்துக்குமார், பேரூராட்சி துணைச்சேர்மன் இந்தியன் செந்தில்குமார், ஜமாத் தலைவர் எம்.ராஜாமுகமது தலைமை செயற்குழு உறுப்பினர் அஞ்சப்பர் எஸ்.ஜெயராமன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அமைப்பாளர் கேஎஸ்.நாராயணன், மருத்துவர் இ.அருள்மணி நாகராஜன், கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஆர்.செல்வகுமார், பேரூர் கழக பொருளாளர் க.செந்தில்கிருஷ்ணன் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஆ. மனோகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

முதல் பரிசு - ரூ.100071 - வழங்குபவர் கூட்டுறவு துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன்.

இரண்டாம் பரிசு - ரூ.75071 வழங்குபவர் - அம்பலமுத்து (பேரூராட்சி சேர்மன்),

மூன்றாம் பரிசு - ரூ.50071 வழங்குபவர் - முறையூர் ஊராட்சி மன்றத் தலைவர் என்.எம். சுரேஷ்,

நான்காம் பரிசு - ரூ.25071 வழங்குபவர் - இந்தியன் செந்தில்குமார் (பேரூராட்சி துணைச் சேர்மன்).

மேலும் இந்நிகழ்வில், மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக்கழக நிர்வாகிகள் அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

விழாவிற்கான ஏற்பாடுகளை கபாடி போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் பேரூர் கழக அவைத்தலைவர் ஆர்.சிவக்குமார், ஒன்றிய பொருளாளர் ஆ.பாஸ்கரன், மாவட்ட அயலக அணிதுணைஅமைப்பாளர் ஆர்.புகழேந்தி, அகில இந்திய கபாடி போட்டி நடுவர் எஸ்.சிவனேஷ்குமரன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை அமைப்பாளர் அ.சையது இப்ராகிம் ஆகியோர் போட்டிக்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.